DIOCESE OF TIRUNELVELI

# BETHESDA C.S.I. TAMIL CHURCH

PUNE

# பெதஸ்தா பேசுகிறது

## GOD'S PROMISE FOR THIS MONTH

*கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார், கர்த்தாவே, உமது கிருபை என்றுமுள்ளது, உமது கரத்தின் கிரியைகளை நெகிழவிடாதிருப்பீராக.*
*- சங்கீதம் 138:8*

## MESSAGE FOR THE MONTH

அன்பானவர்களே,

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழத்துக்கள் இந்த புதிய மாதம் ஆண்டவர் நம்மை அளவில்லாமல் ஆசிர்வதித்து வழி நடத்துவாராக. இந்த மாதம் நமது திருச்சபையில் நடைபெறும் ஒவ்வொரு ஆராதனைகளுக்காக ஜெபியுங்கள். நமது பண்டிகை நாட்கள் அனைத்து குடும்பங்களுக்கும் ஆசிர்வாதமாக அமைவதாக ஆமென்.

தன்னை உயாத்துகிறவன் தாழ்த்தப்படுவான். தன்னை தாழ்த்துகிறவன் தாழ்த்தப்படுவான், உயர்த்தப்படுவான் (மத .23.12)

உயர்வதற்கான வழியையும் கர்த்தர் உங்களுக்கு முன்பாக வைக்கிறார். நீங்கள் உயர்த்தப்படும்படி கர்த்தர் கொடுக்கும் ஆலோசனை நீங்கள் உங்களைத் தாழ்த்த வேண்டும் என்பதாகும் தேவனுக்கு முன்பாகவும், மனுவிருக்கு முன்பாகவும் பெருமையில்லாமல் மனத்தாழ்மையோடு நடந்துகொள்ள வேண்டுமென்பதே கர்த்தார் உங்களுக்கு கொடுக்கும் ஆலோசனையாகும். இதே வசனத்தை நம் அருமை ஆண்டவர் நான்கு இடத்தில் வெவ்வேறு சந்தர்ப்பத்தில் கொடுக்கிறதைப் பார்க்கலாம் நான்கு முறை இதே வசனம் திரும்ப திரும்ப வருகிறது என்றால் இது எவ்வளவு முக்கியமான கருத்துடையது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளலாம். தாழ்மையே உயர்வுக்கு வழி. சரி, நீங்கள் உங்களைத் தாழ்த்துவது எப்படி என்று ஒரு வேளை கேட்கலாம்.

அவர் எவ்வளவு பெரியவராயிருந்தும் தன்னை எப்படி தாழ்த்தினார் என்பதை சிந்தித்து பாருங்கள். உலகங்களை எல்லாம் சிருஷ்டித்த ஆண்டவர் உங்களுக்காக அடிமையின் ரூபம் எடுத்தாரே உங்களுக்காக சிலுவை சுமந்தாரே வேதம் அதைக் குறித்து சொல்லும்போது அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும் தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத் தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடும்து மனுஷர் சாயலானர். ஆவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு மரணபரியந்தமும், அதாவது சிலுலையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். (பிலி 2:6-8)

தம்மைத்தாமே தாழ்த்தினதால் அவருக்கு ஏற்பட்ட உயர்வு என்ன? அதே பகுதியை தொடர்ந்து வாசித்துப் பாருங்கள். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கிழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கு மேலான நாமத்தை அவருக்கு தந்தருளினர். (பிலி: 2:9-1)

தாழ்மையகைக் கற்றுக்கொள்ள இயேசுவண்டை வாருங்கள். அவருடைய பாதத்தில் அமர்ந்து கற்றுக் கொள்ளுங்கள் இயேசு சொன்னார், "நான் சாந்தமும்

மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன், என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்'' (மத் 11:29)

தேவபிள்ளைகளே உங்களை உயர்த்துகிற ஆண்டவரை நீங்கள் உயர்த்தி அவருக்கு முன்பாக தாழ்மையோடு நடந்துக்கொள்ளும்போது ஏற்றக்காலத்தில் நிச்சயமாகவே கர்த்தர் உங்களை உயர்த்தியருளுவார்.

அவர் சிறியவனைப் புழுதியிலிருந்து எடுத்து, எளியவனை குப்பையிலிருந்து உயர்த்துகிறார். அவர்களைப் பிரபுக்களோடே உட்காரவும், மகிமையுள்ள சிங்காசனத்தை சுதந்தரிக்கவும் பண்ணுகிறார். (1சாமு 2:8)

கிறிஸ்துவின் பணியில்

**REV. V.SAMUEL JEBARAJ**

## STORY FOR THE MONTH

***David Livingstone (19 March 1813 – 1 May 1873)*** **-** "A Privilege Not A Sacrifice"

Livingstone is best known for his accomplishments as an explorer as he was the first man to map Africa and the first European to discover many areas of Africa. What is less known of Livingstone is the immense suffering he endured in order to reach Africa with the gospel of Christ.

Besides living in Scotland, David Livingstone was a man on track to successfully accomplish the "American dream", only something went horribly wrong. Born in 1813 and raised in a humble Scottish home, Livingstone set his heart on achieving success by becoming a medical doctor. He supported himself through college and was accepted to medical school in London. Livingstone graduated with honors but not before his life goals would be rearranged by the words of one Dr. Robert Moffat.

While a student in London, Livingstone had the opportunity to hear a message presented by a missionary doctor from Africa named Moffat. Moffat reported,

*"I have sometimes seen, in the morning sun, the smoke of a thousand villages, where no missionary has ever been."*

These words burned in Livingstone's heart ultimately compelling him to give up his small ambitions in order to join Dr. Moffat as a missionary in Africa. David Livingstone lived the next 30 years of his life as a missionary and explorer in Africa. He traveled over 29,000 miles preaching the gospel, providing medical services, building churches, and mapping the vast African continent.



Livingstone is best known for his accomplishments as an explorer as he was the first man to map Africa and the first European to discover many areas of Africa. What is less known of Livingstone is the immense suffering he endured in order to reach Africa with the gospel of Christ. He was once attacked by a lion on the mission field crushing his shoulder to the point that its mobility would be hindered for the rest of his life. Livingstone married and deeply loved Mary Moffat (the daughter of Dr. Moffat), but because of the difficulty of travel and various sicknesses he would spend more than half of his 18 years of marriage separate from his wife. The couple lost a child to sickness on the mission field, and later Livingstone also lost his beloved wife to sickness on the mission field as well. During his time in Africa Livingstone once went 3 years with no correspondence from his family because the letters were unable to get to him.

After all of this here is what Livingston had to say about the price he paid to live as a missionary in Africa.

"People talk of the sacrifice I have made in spending so much time in Africa. Can that be called a sacrifice which is simply paying back a small part of a great debt owing to our God which we can never repay? Away with the word in such a view and with such a thought. It is emphatically no sacrifice. Say rather it is a privilege." (written in David's journal late in life)

David Livingston lost his wife, a child, his health, and gave up a comfortable future living out what we know as the "American dream." Instead he eeked out an existence in the bush of Africa for 30 years. After all that suffering Livingstone says it was a privilege, not a sacrifice. Why? By the grace of God David Livingstone bought into a dream far bigger than himself and a comfortable life. Livingstone lived to participate with God in the greatest of possible adventures. He gave his life for the glory of God among the people of Africa.

## BIRTH OF A SONG

*(Elisha Albright Hoffman – "I Must Tell Jesus")*

Elisha Albright Hoffman was born May 7, 1839, in Orwigsburg, Pennsylvania to a minister named Francis Hoffman. At a young age, Elisha accepted Christ as his Savior.

He attended the Philadelphia public schools, studied science, and then studied the classics at Union Seminary of the Evangelical Association.

When he was 24, the War Between the States had been raging for two years, and he enlisted as a Private in the Union Army on July 9, 1863 with Company A, 47th Infantry Regiment, Pennsylvania. He was discharged just over a month later on Aug. 14, 1863, a couple years before the war ended.



About 1866, he married Susan M. Orwig. He was about 26, and she was about 22.

He worked for the Evangelical Association Publishing House in Cleveland, Ohio, for eleven years.

He was ordained by the Presbyterian Churches in 1873, at the age of 34. Two years later in 1876, his wife, Susan died, leaving him with three young boys.

He was never formally trained in music, but wrote over 2,000 hymns, providing both the words and the tune for most of them. He assisted in compiling and editing fifty song books!

In early 1879, at the age of 40, he remarried to Emma, a woman who was 26 years old. They had a baby boy in December, adding to the family of three other boys. They were living in Cleveland, Ohio, and had his sister-in-law living with them and working as a dressmaker. He was working as a clerk in a print shop.

After this dramatic loss, he quit the publishing house and returned to Pennsylvania.

He took the pastorate at the Benton Harbor Presbyterian Church in Michigan and remained there for 33 years.

Elisha Hoffman loved the Lord and chose to show it by working to help people whom others would call the "down and out". One day he was visiting a woman who was in great pain and very discouraged. Hoffman reminded the woman that she needed to tell Jesus about her problems. She had completely forgotten this simple truth and started repeating the words, "Yes, I must tell Jesus." On his way home those words rang in his ears and would not go away. He promptly wrote the words and the tune to the hymn, "I Must Tell Jesus." In it, he expressed that we not only need to go to Jesus about our physical needs but also concerning the worldly temptations that allure us each day.

In 1900, he was 61 years old and Emma was 47. They had been married for 21 years, and had their only daughter (together) living with them who was 19. He was a "preacher" and they lived in a rented house at 394 Territorial Street, Benton Harbor, Michigan.

In 1904 he was 65 and his physical description was that he was 5 feet 5 ½ inches tall, with high forehead, gray eyes, straight nose, mustache, oval chin, gray hair, fair complexion, and an oval face.

In 1910 he was 70 and Emma was 58. They had been married for 31 years and Emma had lost a child. Their house was a rental on 275 Territorial Street, Benton Harbor, Michigan. He was still a Presbyterian minister.

In 1920 he was 80 and Emma was 62. They were living in a rented house and he was still serving as a Presbyterian minister. Their house was on Chester Street in Cabery, Illinois.

Elisha Hoffman lived to be ninety, and died on Nov. 25, 1929, in Cook County, Illinois.

## ARTICLES FOR THE MONTH
## தாவீது தேவனுடைய கனத்தை மாத்திரம் தேடி நற்சாட்சி பெற்றார்!

*- சகரியா பூணன்*

**தாவீதின்** குணநலத்தில் கவனிக்கக் கூடிய அம்சம் என்னவெனில், தான் அரசனான பின்பும்கூட, அவன் தன்னை தேவனுக்கு முன்பாக நியாயந்தீர்த்துக் கொள்ளத் தயாராய் இருந்தான், என்பதே! பத்சேபாளோடு அவன் பாவத்தில் விழுந்த பின்பு, அந்தப் பாவத்தின் கடுமையை அவன் உடனடியாக உணரவில்லை. பிறகு, தீர்க்கதரிசி நாத்தான் வந்து அவனுடைய பாவத்தை கடிந்துகொண்ட உடனே, தாவீது தனது பாவத்தை தாழ்மையுடன் ஏற்றுக்கொண்டதைக் காண்கிறோம் (2சாமு 12:13). பழைய ஏற்பாட்டுக் காலத்தில் வாழ்ந்த தாவீதுடன் நாம் நம்மை ஒப்பிடக்கூடாது. தாவீது கிருபைக்கு கீழ்பட்டிருக்கவில்லை. தேவன் நம்மிடம் இப்பொழுது கிருபையின் காலத்தில் எதிர்பார்க்கும் தரமோ மிக அதிகமாகும் (மத் 5:28-29). இருப்பினும், தாவீது பாவத்தைக் குறித்து குற்ற உணர்வடைந்தபின், எப்படி நடந்துகொண்டான் என்பதிலிருந்து, ஒரு நல்ல பாடத்தைக் கற்றுக் கொள்கிறோம்.

மனுஷரீதியில் சாதாரணமாய் எண்ணப்படும் குற்றத்தைப் புரிந்த சவுலிடமிருந்து 'இராஜ்யபாரத்தை' தேவன் ஏன் எடுத்தார்? மேலும் அதைவிட மாபெரும் பாவங்கள் என எண்ணப்படும் விபச்சாரமும், அதைத் தொடர்ந்து கொலையும், தாவீது செய்தபின்பும், தேவன் அவனை அரசனாக இருக்கும்படி ஏன் அனுமதித்தார்? இதற்கு பதில்: இந்த இரண்டு மனிதர்களும் தங்கள் பாவத்தை அறிந்தவுடன், அவர்கள் எப்படி நடந்து கொண்டார்கள் என்பதிலேயே இருக்கிறது. சவுல் சாமுவேலிடம் 'அந்தரங்கமாக' தன் பாவத்தை ஒப்புக் கொள்கிறான். ஆனால் ஜனங்கள் முன், தனக்கு மரியாதையைத் தேடுகிறான்(1சாமு 15:30). அவன் பாவஞ் செய்தான், இருப்பினும் மனுஷருடைய கனத்தையும் எதிர்பார்க்கிறான்! தாவீதோ அப்படியல்ல, தன் பாவங்களை மறைக்கப்பார்க்காமல் எல்லோரும் அறியும்வண்ணம் சங்கீதம் 51-ஐ எழுதி வெளிப்படையாக ஏற்றுக் கொண்டான்!!

இவ்விரு மனுஷரை தேவன் நடத்திய முறையினின்று நாம் கற்றுக்கொள்ள வேண்டிய முக்கியமான ஆவிக்குரிய குணாதிசயம் என்னவென்றால்: விபச்சாரம், கொலை போன்ற பாவங்களைவிட, **மனுஷருடைய மரியாதையைத் தேடுவது...** மிகப்பெரிய பாவமாக தேவனுடைய பார்வையில் காணப்படுகிறது.

**இதனால்தான் சிலுவையிலிருந்த கொலையாளியையும், விபச்சாரத்தில் பிடிக்கப்பட்ட ஸ்திரீயையும் இயேசுவால் மன்னிக்க முடிந்தது. ஆனால் மனுஷருடைய மகிமையைத் தொடர்ந்து தேடின பரிசேயர்களை அவரால் மன்னிக்க முடியவில்லை.**

மனுஷருடைய கனத்தைத் தேடுவது ஒருவகையில் விக்கிரக ஆராதனையாகும். மேலும், கர்த்தர் நம் ஒவ்வொருவரையும் சோதித்துப்பார்க்கும், அதிகமான பகுதி, இதுதான்! இந்தச் சோதனையில் வெற்றி பெறுவோர் பாக்கியவான்கள்!!

***Welcome articles for Mag.,***
***contactus@csitamilchurchpune.org***
***1page/250words***
***by 15th Sep'16***

நமது சென்றகாலத் தோல்விகளை, நாம் தாழ்மையாக ஏற்றுக்கொள்ள சம்மதிப்போமானால், தேவனுடைய நோக்கத்தை நாம் நிறைவேற்ற அவை நமக்கு தடையாய் இருப்பதில்லை! ஏனெனில், தாழ்மையுள்ளவர்களுக்கு தேவன் நிச்சயமாய் கிருபை அளிக்கிறவராயிருக்கிறார்!!

## BIBLE QUIZ FOR THE MONTH

## *வேதாகமப் பகுதி : எண்ணிக்கை (எண்ணாகமம்) 1 லிருந்து 18ம் அதிகாரம் வரை*

*1. உடன்படிக்கை பேழையின் மேலிருந்த இரக்கத்தின் அறியனையிலிருந்து பேசிய குரல் யாருடையது?*

- ☐ மோசே
- ☐ ஆண்டவர்
- ☐ லேவியர்

*2. இஸ்ரேயேல் கோத்திரங்களில் போருக்கு போகத்தக்கதாக எண்ணப்பட்ட ஆண்களின் தொகை எந்த குலத்தில் அதிகமாக இருந்தது?*

- ☐ யூதா குலம்
- ☐ தாண் குலம்
- ☐ செபுலோன் குலம்

*3. எங்களுக்கு நீ கண்களாயிருப்பாய் என்று யார் யாரிடம் கூறியது?*

- ☐ இரகுவேல் கோபாபிடம்
- ☐ மோசே ஆண்டவரிடம்
- ☐ மோசே கோபாபிடம்

*4. ஆண்டவர் ஆரோனை நோக்கி நாட்டில் உனக்கு உரிமைச் சொத்து ஏதுமில்லை,அவர்களிடையே உனக்கு பங்குமில்லை என்று ஏன் கூறினார் ?*

- ☐ ஏனென்றால் இஸ்ரயேல் மக்களிடையே உனக்குப் பங்கும் உரிமைச்சொத்தும் நானே என்று கூறினார்.
- ☐ ஏனென்றால் படைக்கும் படையலின் பத்தில் ஒன்றை நான் உரிமை சொத்தாக கொடுப்பேன் என்று கூறினார்
- ☐ ஆண்டவருக்கு உயர்த்தி படைக்கும் புனிதப் படையல்கள் அனைத்தையும்,உன் புதல்வர்,புதல்விக்கு நியமமாக தருகிறேன் என்று கூறினார்

*5. என்னை முன்னிட்டு நீ பொறாமைப்படுகிறாயா? என்று மோசே யாரிடம் கூறினார்?*

- ☐ ஆரோன்
- ☐ எல்தாது
- ☐ யோசுவா

6. நாசீர் விதியின்படி கடவுளுக்கு தன்னை அர்ப்பணித்துக்கொண்டதின் அடையாளம் எங்கே இருக்கிறது?

- இதயத்தில்
- தலையில்
- கைகளில்

7. திருவுறைவிடத்துக்குப் பின்னால் மேற்கே பாளைய மிறங்க வேண்டியவர்கள் எந்த குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்?

- கேர்சோன் குடும்பம்
- மெராரி குடும்பம்
- கோகாத்து குடும்பம்

8. இஸ்ரயேல் மக்களின் முறுமுறுப்புக்களை ஒழிக்க ஆண்டவர் என்ன செய்தார்?

- இஸ்ரயேல் மக்களிடம் மோசே மூலம் பேசினார்
- தான் தெரிந்துக்கொண்ட ஆரோனின் கோலை துளிர்விடும்படி செய்தார்
- திருவுறைவிடத்தை நெருங்கி வருகிற எவனும் செத்து போகும்படி செய்தார்

9. கானான் நாட்டை உளவுப்பார்க்க சென்றவர்கள் எத்தனை நாட்கள் கழித்து திரும்பி வந்தனர்?

- 40 நாட்கள்
- 35 நாட்கள்
- 50 நாட்கள்

10. சந்திப்புக் கூடார வேலையின் திருப்பணிக்கு மெராரியர் குடும்பத்தில் எண்ணப்பட்டோர் எத்தனை பேர்கள்?

- 2630 பேர்கள்
- 2750 பேர்கள்
- 3200 பேர்கள்

11. ஓய்வு நாளில் விறகு பொறுக்கிய மனிதனை முதலில் என்ன செய்தார்கள்?

- காவலில் வைத்தனர்
- கல்லால் எறிந்தனர்
- பாளையத்துக்கு வெளியே துரத்திவிட்டனர்

12. முதல் மாதம் பதினான்காம் நாள் பாஸ்கா கொண்டாட முடியாமல் போனவர்கள் பிறகு எந்த நாளில் கொண்டாட வேண்டும்?

- இரண்டாம் மாதம் பதினான்காம் நாள் காலைப்பொழுதில்

- [ ] இரண்டாம் மாதம் பதினான்காம் நாள்
- [ ] எல்லா விதிமுறைகளின்படி கொண்டாட வேண்டும்

*13. பூவுலகின் அனைத்து மாந்தரிலும் மோசே எவ்வாறு திகழ்ந்தார்?*

- [ ] சாந்தமிகு மானிடராய்
- [ ] நம்பிக்கையுள்ளவராய்
- [ ] உண்மையுள்ளவராய்.

*14. மோசேயும்,ஆரோனும்,இஸ்ரயேல் மக்கள் கூட்டமைப்பின் முழுவதற்கும் முன்பாக முகங்குப்புற விழுந்ததன் காரணம் என்ன?*

- [ ] மக்கள் முறையிட்டதால்
- [ ] ஆண்டவரை நம்பாததால்
- [ ] எகிப்திற்கே திரும்பி செல்வோம் என்றதால்

*15. கோராகு,தாத்தான்,அபிராம்,ஆகியோருக்கு ஆண்டவர் அளித்த தண்டனை என்ன?*

- [ ] தரை தன் வாயைத் திறந்து அவர்களையும்,அவர்களுடைய எல்லா உடைமைகளையும் விழுங்கிவிட்டது
- [ ] ஆண்டவர் புதுமையான ஒன்றை செய்தார்
- [ ] உயிரோடு பாதாளத்துக்குள் இறங்கும்படி செய்தார்.

***Send the Answers to***
***contactus@csitamilchurchpune.org***
***And win fabulous prizes***
***by 15th Sep'16***